# MIN ALAI
# மின் அலை

July 2025 Volume : 13 Issue 7 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-



13.07.2025 அன்று MTPS முகாமிற்கு வருகைத் தந்த மதிப்பிற்குரிய வாரியத் தலைவர் மரு.J.ராதாகிருஷ்ணன், I.A.S., அவர்களை, நமது சங்கத்தின் மாநிலத் தலைவர் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து நமது சங்கத்தின் கோரிக்கைகளை தெரிவித்தார்.

**தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்**

பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
|---|---|---|
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின்
# 57 வது மாநிலப் பொதுக்குழு கூட்டத்தின் நிகழ்வுகள்













ஆசிரியர்
பொர்.உ..ராஜேந்திரன்
9092687454

ஆசிரியர் குழு
பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

| Page | Contents |
| --- | --- |
| 08. | Our Representations |
| 13. | Board Order |
| 14. | Chairman Letter |
| 15. | 57 வது பொதுக்குழு கூட்டம் |
| 22. | காலந்தோறும் நன்றி |
| 23. | பத்திரிக்கைச் செய்திகள் |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 13 ஜுலை 2025 இதழ் 7

## பிரிவு அலுவலகங்களின் அவல நிலை

மின்வாரியம் ஏனையத் துறைகளைப் போல் இல்லாது நித்தம் நித்தம் 24 மணி நேரமும் வளர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு துறையாகும்.

நான்காண்டுகளுக்கு ஒரு முறை மின்வாரிய நிர்வாகம் தொழிற்சங்கங்களுடன் பேசி வேலைப்பளுவை கூடுதலாக்கி ஒப்பந்தம் செய்து கொள்கிறது. துரதிருஷ்டவசமாக அந்த ஒப்பந்தத்தின்படி தன் பொறுப்பை நிறைவேற்றாமல் மின்வாரிய நிர்வாகம் மின்வாரியத்தின் செயல்பாடுகளை முடக்கிப் போடுகிறது.

எங்கெல்லாம் பணிச்சுமை அதிகரிக்கிறதோ.... நுகர்வோர் அதிகரிக்கிறார்களோ – எங்கெல்லாம் தொடர்ச்சியான செயல்பாடு நிகழ்கிறதோ– அங்கெல்லாம் மனித வளத்தை கூட்ட வேண்டும். இதனை விடுத்து, அதிக வேலைப் பளு சுமத்தப்பட்டால் பொருளாதார நஷ்டம் மற்றும் விபத்துகளை நிர்வாகம் சந்திக்க நேரிடும்.

நம்முடைய மின்வாரிய நிர்வாகம் விபத்துகளை, நஷ்டங்களை, தடைகளை வலிந்து பெற்றுக் கொள்கிறது என்பதை கவலையுடன் சுட்டி காட்டுகிறோம்.

ஒப்பந்தப்படி நியமிக்கப்பட வேண்டிய களப்பணியாளர்களையும் பொறியாளர்களையும் நியமிக்க முடியாமல் பல்வேறு கொள்கை முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு வாரியம் சுயசார்புத் தன்மையை இழந்து தத்தளிக்கிறது.

வாரியத்துக்கும் பொதுமக்களுக்கும் நேரடித் தொடர்பு பிரிவு அலுவலகங்கள்தான். அரசின் நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவது பிரிவு அலுவலகங்கள்தான்.

வாரியத்தின் முகமாக, நுழைவாயிலாக செயல்படுகின்ற பிரிவு அலுவலகங்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,– வேலைப்பபளு ஒப்பந்தப்படி ஒரு பிரிவு அலுவலகத்தில் எட்டு களப்பணியாளர்கள் இருக்க வேண்டும் எனில் தற்போது மூன்று பணியாளர்கள் மட்டுமே உள்ள அவலநிலை, இருக்கும் மூன்று பேரில் ஒரு பணியாளர் மின்கம்பங்கள் ஏற முடியாத நிலையிலும்.... மற்றொருவர் உடல்நிலை சரியற்ற நிலையிலும் இருப்பார்.
மீதமுள்ள ஒரு பணியாளர் பக்கத்தில் இருக்கும் துணை மின் நிலையத்துக்கு அயல் பணிக்கு சென்று விடுவார்.

"ஒரு களப்பணியாளர்— ஒரு பிரிவு அலுவலகம்" — என்ற வகையில் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவில் பிரிவு அலுவலகங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவு மின்தடை ஏற்பட்டால் அதை சீர் செய்திட பிரிவுப் பொறியாளர் பக்கத்து அலுவலகங்களிருந்து, களப்பணியார்களை ஒன்று திரட்டி, மின் தடை நீக்கிட பகல் நேரத்திலேயே நீண்ட நேரம் ஆகிறது.

இரவில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது.

பிரிவு அலுவலகங்களில் இன்றைய காலகட்டத்தில் அதிகபட்சமாக இரண்டிலிருந்து நான்கு பேர் இருந்தால் அது ஆச்சரியமாக பார்க்கப்படுகிறது. இந்த அவல நிலையில் இரவு நேரங்களில் உயர் மின்னழுத்த பாதையில் ஏற்படும் மின்தடைகளை உடனடியாக சீர் செய்ய வேண்டும் என்று உத்தரவுகள் பெறப்படுகின்றன, நுகர்வோர் எதிர்பார்ப்புகளை தீர்க்க முடியாத நிலை உள்ளது.

மின் தடை சரிசெய்ய குறைந்தது இரு நபர்களாவது செல்ல வேண்டும் மேலும் அவர்கள் கம்பம் ஏறும் திறன் உள்ளவர்களாக இருத்தல் அவசியம், மின்தடை சரி செய்யும் வரை கைபேசி தொடர்ந்து ஒலித்த வண்ணமே உள்ளது. பிரிவுப் பொறியாளர்கள், பணியாளர்களை தொடர்பு கொள்ளவும், பணி மேற்கொள்ளவும் இதையே நம்பி உள்ளார்கள். தொடர்ந்து நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகளை பேசுவதாலும், எதிர் முனையில் கூறப்படும் வசை மொழிகளும் மிகுந்த மன உளைச்சல்களை ஏற்படுத்துகின்றது. இதனால் ஏற்படும் கவனச் சிதறலால் பணிப் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்த முடியாமல் களப்பணியாளர்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் உருவாகிறது. ஒருவேளை தனி நபராக மின்தடை சரிசெய்ய சென்று இருப்பாரேயானால் அது கூடுதல் இன்னல்களை ஏற்படுத்துகிறது. போதிய வெளிச்சம் இல்லாமல் இருளில் மின்தடைக்கான காரணங்களை கண்டறிவது மிகவும் கடினமான சவாலாக உள்ளது.

இப்படி பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு பல மணி நேரம் இரவு நேரத்தில் பணி செய்தாலும் அடுத்த நாள் தத்தம் அன்றாடப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. போதிய உறக்கம் இல்லாமல் உடலில் பல்வேறு உபாதைகள் ஏற்படுவதற்கு வழிவகுத்துவிடுகிறது. உடல் நிலையில் கவனம் செலுத்திட உரிய நேரம் இல்லாததால், பிரச்சனை மேலும் வலுப்பெற்று பெரும் உபாதைகளை ஏற்படுத்தி விடுகிறது.

"பொது மக்களின் அதிருப்தி, மக்கள் பிரதிநிதிகளின் கோபம்" எல்லாமே மின் வாரியத்தின் பெருமையை சீர்குலைத்து வருகிறது. இருக்கிற ஒரு சில பணியாளர்களுக்கும் "வேலைப் பளு" அளவிட முடியாததாகி விட்டது. அதனால் களப்பணியாளர்கள் சோர்வுற்று மன அழுத்தத்துக்குள்ளாகி அடிக்கடி மின் விபத்துகள் நடைபெறுகின்றன, குடும்ப வாழ்க்கையில் குழப்பத்தையே பணியாளர்கள் சந்திக்கின்றனர்.

பொதுமக்களும் மின் விபத்துகளிலிருந்து தப்பவில்லை. இவ்வாறாக துறை சார்ந்த / சாராத விபத்துகளால் உயிரிழப்பையும் பொருள் இழப்பையும் ஏற்க வேண்டிய கட்டாயத்துக்கு மின் வாரியம் தள்ளப்பட்டுள்ளது.

அரசின் எதிர்பார்ப்புக்கேற்ப பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப புதிய இணைப்புகளும் பராமரிப்புப் பணிகளும் செய்ய முடியாமல் பிரிவு அலுவலகங்கள் தடுமாறுகின்றன.

மின்வாரியத்தின் மெத்தன செயல்பாடுகளால், பொதுமக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அதிருப்தி எழுமேயானால்— விபத்துக்களால் ஊழியர்களும் பொதுமக்களும் பாதிக்கப்படுவார்களேயானால்—— அதற்கு முழுப் பொறுப்பு மின்வாரிய நிர்வாகத்தையே சாரும்.

நமது வாரியம் கணக்கீடு மற்றும் வசூலில் 100% எட்டி இருந்த நிலையில் தற்போது போதிய பணியாளர்கள் இல்லாததால், அதன் சதவீதம் குறைய துவங்கி உள்ளது. மேலும் மின் திருட்டுகளும் அதிகரித்துள்ளது. இது ஒரு ஆபத்தான தொடக்கமாகும். இது மோசமான எதிர் விளைவுகளை தொடர்ந்து ஏற்படுத்தும். இவற்றையெல்லாம் சீர் செய்ய உடனடியாக பணியாளர்கள் நியமனம் ஒன்றே சிறந்த தீர்வாகும்.

பிரிவு அலுவலகங்களில் தற்போதுள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பி அவல நிலையை சீர் செய்து, உயிரூட்டி மக்கள் சேவையை தொடர்ந்து செய்து அரசுக்கு நற்பெயர் ஏற்படுத்திட உரிய வழிகளை ஏற்படுத்தித் தருமா மின்வாரியம்?

# பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே!

வணக்கம்.

பொறியாளர் சங்கத்தின் 57வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கூட்ட நடவடிக்கைகள் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரதி மாதம் முதல் செவ்வாய் கிழமையில் தவறாமல் கிளை செயற்குழு கூட்டங்களை கோட்டவாரியாக நடத்திடவும், அனைத்து உறுப்பினர்களும் அதில் கலந்துகொண்டு அனைத்து தகவல்களையும் அறிந்து சிறப்புடன் செயலாற்றிடவும் வேண்டுகிறேன்.

வாரியத் தலைவருடனான திட்டமிட்ட பேச்சுவார்த்தையில் (04.03.2025) பொறியாளர் சங்கத்தினால் முறையீடு செய்யப்பட்ட கோரிக்கையான, காலியாக உள்ள ஒரு விநியோக பிரிவினை உதவி செயற்பொறியாளர்கள் கூடுதல் பொறுப்பாக கவனித்துக் கொள்ள பணிக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்திட கேட்டுக்கொண்டதை ஏற்று வாரியத் தலைவர் உத்தரவின்படி உரிய ஆணை 26.06.2025 அன்று தலைமைப் பொறியாளர் பணியமைப்பு அவர்களால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாரியத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 01.07.2025, 13.07.2025, 22.07.2025 மற்றும் 08.07.2025 ஆகிய தினங்களில் வாரியத் தலைவரை சந்தித்து கீழ்காணும் கோரிக்கைகள் குறித்து விவாதித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது.

- நிலுவையிலுள்ள அனைத்து உள்முகத்தேர்வு பதவி உயர்வுகளையும் உடனடியாக வெளியிடவும், மிகுதியான எண்ணிக்கையில் உதவிப் பொறியாளர் காலிப் பணியிடங்கள் உள்ளதை சுட்டிக்காட்டி, உள்முகத் தேர்வுக்கான பங்கினை சற்றும் குறைத்திடாது பதவி உயர்வு வழங்கிட வலியுறுத்துதல்
- புதிதாக நிர்மானிக்கப்பட்டு இயக்கத்திலுள்ள புதிய துணை மின் நிலையங்களுக்கான பதவி அனுமதி மற்றும் பணியிடங்களை நிரப்புதல்
- பிரிவு அலுவலகங்களில் அன்றாட பராமரிப்பு மற்றும் தடையில்லா மின்சாரம் வழங்கிட ஏதுவாக, களப்பணி காலியிடங்களை உடனடியாக நிரப்பிட உரிய நடவடிக்கை வேண்டுதல்.
- தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம்
- ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு ஒப்பந்த பேச்சு வார்த்தையினை துவக்கிட வேண்டுகோள், பிரிவு I மற்றும் பிரிவு II அலுவலர்களுக்கும் கடந்த காலங்களில் வழங்கப்பட்டது போலவே, தொடர்ந்து ஊதிய உயர்வு அனுமதித்தல்.
- நிலுவையிலுள்ள கருணை அடிப்படையில் வாரிசு பணி நியமனம் கோரும் விண்ணப்பங்களை விரைந்து பரிசீலித்து, பணி நியமன உத்தரவுகள் வழங்கிட நடவடிக்கைகள்
- மின்வாரியத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கு புதிய பணியிட அனுமதி வழங்கிட தடையாக உள்ள, BP2ன் சரத்துகளை நீக்கிட உரிய நடவடிக்கை வேண்டுதல்
- மின் உற்பத்தி நிலையங்களில் முறைப்பணி இயக்கத்தினையும் அதன் முக்கியத்துவத்தையும் அறிந்தே, ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 5 ஆப்ரேட்டர்கள் நடைமுறையினை மீண்டும் அனுமதித்தல்.
- மேட்டூர் அனல் மின் நிலையம்–II சாம்பல் கையாளும் பிரிவினை மேம்படுத்துதல்
- உதவி செயற்பொறியாளர் / சிவில் பதவி உயர்வுகளுக்கு call for செய்தல் (பணிஅனுபவ கால நிபந்தனைகளை தளர்த்தி)
- கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட விடுப்பு பயண சலுகையினை (LTC) பணியாளர்களுக்கு மீண்டும் திரும்ப வழங்குதல்.

மேலும், தமிழக அரசின் அரசு செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நமது தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

மின்வாரியத்தின் சுயாட்சி அதிகாரங்களை பறிக்கும் விதமாக வெளியிடப்பட்ட வாரிய ஆணை 2 நாள் 12.04.2022ல், பணி நியமனம் தொடர்பாக அரசின் அனுமதி பெறவேண்டும், எந்த ஒரு புதிய பணியிடமும் உருவாக்கப்பட கூடாது என்ற பாதகமான சரத்துகளை முற்றிலும் நீக்கிட விரிவான முறையீடுகள் வாரிய தலைவரிடம் அளித்து விவாதிக்கப்பட்டுள்ளது. இந்த முறையீட்டின் அவசியமும் வாரிய நலன் காத்திட, இதில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அனைத்து வாரிய இயக்குனர்களையும் சந்தித்து முறையீடு செய்து விவாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14.07.2025, 23.07.2025 ஆகிய தினங்களில் மேலாண்மை இயக்குனர் /மின் தொடரமைப்புக் கழகம் அவர்களைச் சந்தித்து வாரிய ஆணை 2 நாள் 12.04.2022ல் பாதகமான சரத்துகளை முற்றிலும் நீக்குதல், உள்முக தேர்வு பதவி உயர்வில் தொழில்நுட்ப உதவியாளர்களை துணை மின் நிலையங்களுக்கு முன்னுரிமையில் நிரப்புதல் மற்றும் புதிய துணை மின் நிலையங்களை பணியிட அனுமதி குறித்து முறையீடு செய்யப்பட்டது.

கடந்த 16.07.2025 அன்று இயக்குனர் / விநியோகம் அவர்களை நேரில் சந்தித்து,

- தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் செயற் பொறியாளர்களின் work orders டெண்டர் உச்சவரம்பினை உயர்த்திட முறையீடு
- புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களுக்கான புதிய பணியிட அனுமதி மற்றும் எதிர்வரும் பதவி உயர்வுகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்.
- நிலுவையிலுள்ள அனைத்து உள்முகத் தேர்வு பதவி உயர்வுகளையும் உடனடியாக வழங்குதல்.
- மின் விபத்துகளின் போது, பிரிவு பொறியாளர்களின் மீது தேவையில்லாமல் புனையப்படும் FIR நடவடிக்கைகளை தடுத்து நிறுத்திட அரசாணை வழங்க வலியுறுத்தல்

ஆகியவை குறித்து விரிவாக விவாதித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது. நமது முறையீட்டினைத் தொடர்ந்து FIR நடவடிக்கை குறித்த கோப்பு தலைமை பொறியாளர் / திட்டமிடல் வாயிலாக தமிழக அரசின் உள்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனராக புதிதாக பொறுப்பேற்றுள்ள திரு.M.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்களை கடந்த 16.07.2025 அன்று சங்கத்தின் சார்பில் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

2000 / 2002 உதவிப் பொறியாளர் முன்னுரிமை வழக்கு 16.07.2025 அன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கில் நமது தரப்பு வாதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. நிர்வாகத் தரப்பில் வாதங்களை முன்வைத்தும், இன்னும் சில பிரதிவாதிகளுக்கு Affidavit அளிக்கவில்லை என்று கூறியதைத் தொடர்ந்து, இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள, வழக்கு 20.08.2025 அன்றைய தேதியில் பட்டியலிட உத்தரவிடப்பட்டது.

இளநிலை பொறியாளர் / இயந்திரவியல் பதவி உயர்வுக்கு தடையாக உள்ள வழக்கு கடந்த மூன்று வாரங்களாக தொடர்ந்து பட்டியலிடப்பட்டு வருகிறது. எதிர்தரப்பு வழக்குறைஞர் வழக்கினை ஒத்தி வைத்திட தொடர்ந்து கேட்பதை நமது தரப்பிலும், நிர்வாகத் தரப்பிலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

தலைமை பொறியாளர் பணியமைப்பு அவர்களை கடந்த இரண்டு 02.07.2025, 09.07.2025, 16.07.2025, 23.07.2025 ஆகிய தினங்களில் நேரில் சந்தித்து

- நிலுவையிலுள்ள உள்முகத்தேர்வு பதவி உயர்வுகளை உடனடியாக பரிசீலித்து வழங்குதல்
- இளநிலை பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலை பதவி உயர்வுக்கு தகுதிக்காண் அறிக்கைகள் call for செய்ய
- உதவி செயற்பொறியாளர் / மின்னியல் பதவி உயர்வுகள் call for
- உதவி பொறியாளர் / இயந்திரவியல் மற்றும் இளநிலை பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை உள்முகத்தேர்வு நடவடிக்கைகள் நிறைவுற்ற நிலையில் உடனடியாக பதவி உயர்வு உத்தரவுகளை உடனடியாக வழங்கிடவும், உதவி பொறியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வினை விரைந்து நிறைவு

செய்திடவும் வலியுறுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 23.07.2025 அன்று, இணை மேலாண்மை இயக்குனர் / நிதி அவர்களுடன், ERP சம்பந்தமான குறைபாடுகளைக் களைய திட்டமிட்ட பேச்சு வார்த்தை நடைபெற்றது. விவாதத்தில் மேற்பார்வை பொறியாளர் / ERP மற்றும் ERP Wing அலுவலர்கள் மற்றும் கணக்கு பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வாரியத்தின் சார்பில் 01.12.2023 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைக்கு 24.07.2025 அன்று காலை 11:30 மணிக்கு தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, பேச்சுவார்த்தை நடைபெற்றது. பொறியாளர் சங்கத்தின் சார்பில் கலந்துகொண்டு, நமது கோரிக்கைகள் எழுத்துப்பூர்வமாக அளிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக,

1. Class I மற்றும் Class II அலுவலர்களுக்கும் கடந்த காலங்களில் வழங்கியதை போலவே, எவ்வித பாகுபாடுமின்றி ஊதிய உயர்வினை வழங்குதல்
2. 20% ஊதிய உயர்வு, 5% ஆண்டுவுயர்வு, ஒவ்வொரு 8 ஆண்டுகால பணி நிறைவு செய்தமைக்கும் ஒரு ஆண்டுவுயர்வு 09 ஆண்டுகள் தேர்வுநிலை, 15 ஆண்டுகள் சிறப்பு நிலை, மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/– இடைக்கால நிவாரணம்.
3. மருத்துவப்படி (Medical Allowance) ரூ.1000ஆக உயர்த்துதல்
4. மத்திய அரசுக்கு இணையாக HRA, CCA வழங்குதல்
5. அனைத்து படிகளையும் இரட்டிப்பாக்குதல்
6. வாரிய ஆணை 2 நாள் 12.04.2022ல் பாதகமான சரத்துகளை முற்றிலும் நீக்குதல்.

உள்ளிட்ட சலுகைகளை வழங்கிட உரிய விவாதங்களுடன் ஊதிய உயர்வு கமிட்டியிடம் முறையீடு அளிக்கப்பட்டுள்ளது.

TNPSC மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவி பொறியாளர் / நேரடி நியமனம் பெற்ற சிவில் பொறியாளர்கள் 30 நபர்களுக்கும், இயந்திரவியல் பொறியாளர்கள் 24 நபர்களுக்கும், மின்னியல் பொறியாளர்கள் 204 நபர்களுக்கும் வட்ட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

நமது தொடர் முறையீடுகளின் காரணமாக இளநிலை பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை, உதவி பொறியாளர் / இயந்திரவியல் மற்றும் உதவி பொறியாளர் / மின்னியல் உள்முக தேர்வு பதவி உயர்வு பட்டியல் ஒப்புதல் அளிக்கப்பட்டு வட்ட ஒதுக்கீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல் உள்முகத்தேர்வு இறுதிக் கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது

வாழ்க பொறியாளர் சங்கம்.

நன்றி

பொர்.V.S.சம்பத்குமார்
பொதுச் செயலாளர்

## சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்

**பொறியாளர் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் 79வது சுதந்திர தின நல்வாழ்த்துக்களை பொறியாளர் சங்கம் தெரிவித்துக்கொள்கிறது.**



## OUR REPRESENTATIONS

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**

TNPDCL,

Chennai-600 002.

Lr.No.GS / TNEBES / F1/ D.02 /2025, Dt.26.06.2025.

Respected Sir,

Sub: Promotions to the post of Assistant Engineer / Electrical & Mechanical Internal Selection – Clearance from Govt. regarding modalities is received - Issuing of promotion orders to the maximum to fill up the vacancies – Requested – Regarding.

Ref: 1. Letter No. 004565 / G.55 / G.551 / 2022, Dated: 24.01.2024

2. Letter No. 004565 / G.55 / (N) G.172 / 2020, Dated: 29.01.2024

3. Letter No. 04565 - C / G.55 / (N) G.172 / 2020, Dated: 01.02.2024

4. Lr.No.GS/ TNEBES/ F1/ D.06 / 2024, Dt. 04.11.2024.

5. Lr.No.GS/ TNEBES/ F1/ D.19/ 2025, Dt. 20.01.2025.

Promotions for the post of Assistant Engineer / Electrical, Mechanical and Civil by Internal Selection were called from eligible individuals vide references 1, 2 and 3 cited above. The calling for was made based on our Sangam's persistent representations.

The numerous applications received were consolidated and finalized by the Personnel Administration long time ago. At the time of issuing promotions clarifications were sought from the State Govt. regarding the modalities to be followed in issuing of these promotions.

In the Civil category the numbers were meager and all eligible individual who had applied for promotion could be promoted. Hence pending clarification, Promotion orders were released a month ago for the Civil category alone consisting 74 persons. The Assistant Engineer Promotions for the categories of Electrical and Mechanical categories are pending.

Presently we understand clarification sought from the State Govt. has been received, but promotions has been not been issued yet. The reason being that, as ever the Degree Holders Association have raised their concern in issuing of Assistant Engineer Promotions by Internal Selection giving false data to the Personnel Management.

We would like to state that the case filed through individuals at the Hon'ble Madras High Court Bench and Madurai Bench, few months ago, to stay the internal selection was not permitted by the Hon'ble High Court. The Personnel Management is fully aware of these matters. Hence entertaining the plea of the Degree Holders Association further is highly objectionable and will be very much detrimental to the Board works.

Yet our Sangam has presented its case with 4 decade old statistics to the Personnel Management during the discussion called upon by the Chief Engineer / Personnel during the past 2 days on the 24th and 25th. All the above matters have been explained in detail to the respected Director Distribution also requesting justice.

We pray and submit the following to the respected Chairman cum Managing Director for kind consideration

- We understand that the numbers arrived as per 1:1 ratio for the Mechanical category, around 150 Nos. is in order and we request the Promotion orders to be released fully at the earliest.
- With regards to the Electrical category, huge numbers of Assistant Engineer posts are lying vacant (Around 1400 Nos.) in the field affecting the day to day works particularly the Section Offices and Generating Stations. Issuing of these Assistant Engineer promotions will hugely benefit the needs of the Board.
- A backlog of 268 Nos. exists in the post of Assistant Engineer / Electrical through Internal Selection.
- Board has initiated the process of recruiting 611 Nos. (211 + 391) Assistant Engineer / Electrical through Direct Recruitment.
- As per the ratio of 1:1 between Direct Recruitment and Internal Selection, 602 Nos. Assistant Engineers need to be promoted through Internal Selection.
- Adding the 602 Nos. to the existing backlog of 268 Nos., a minimum of 870 Nos. need to be promoted as Assistant Engineer / Electrical through Internal Selection.
- **This would not only benefit the individual but the Board too, as most of the posts lying vacant would be filled up.**

Hence we request the respected Chairman cum Managing Director to instruct the respected Chief Engineer / Personnel to finalize the numbers to the maximum, expedite the promotion process and issue promotions to the post of Assistant Engineer / Electrical and Mechanical by Internal Selection at the earliest and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,

**(N.R.SENTHIL)** General Treasurer.

---

To

**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**

TNPDCL,

Chennai-600 002.

**1. Lr.No.GS/TNEBES/F1/D.03 /2025, Dt.08.07.2025.**

Respected Sir,

Sub: Filling up of Technical Assistant / Electrical Posts by Internal Selection – to select all the eligible candidates– Requested - Regarding.

Ref: 1) Letter No.32194/G.19/G.191/2023-1, dated: 12.12.2023.
2) Lr.No.GS/TNEBES/F1/D.13 / 2024, Dt. 09.12.2024

The applications for Filling up of Technical Assistant / Electrical Posts by Internal Selection was invited from eligible individuals vide reference cited above.

The numerous applications received were consolidated and finalized by the Personnel Administration long time ago. At the time of issuing promotions clarifications were sought from the State Govt. regarding the modalities to be followed in issuing of these promotions. Presently the clarification sought from the State Govt. has been received.

Huge number of vacancies exists in Technical Assistant / Electrical posts affecting the day to day works of the Board in Distribution, Generation, Substations and other areas. Releasing of these promotions will be highly beneficial to the Board.

We, have already represented, Vide ref (2) cited above, to select the all eligible candidates to the Technical Assistant posts considering the huge vacancies in the field.

Hence we kindly request the Respected Chairman cum Managing Director in this matter to issue Technical Assistant / Electrical promotion orders by Internal Selection to all eligible candidates at the earliest please.

**2. Lr.No.GS/TNEBES/F1/D.04/ 2025, Dt. 22.07.2025.**

Respected Sir,

Sub: Leave travel concession deferred during COVID period as per Govt. orders – G.O. passed on restoration – Restoration of Leave travel concession on par with G.O. – requested regarding.

Ref: G.O.No.178, Dated 20th June 2022 of Finance (Budget General-I) Department.

Various measures to curtail the expenditure were taken in the Board during COVID period in line with the orders of the Tamil Nadu Government., One of the measures curtailed by the Board is the Leave Travel Concession citing the G.O. No.249, dated 21st May 2020 and it was stopped immediately.

Now, the Government Orders have been issued and Leave Travel Concession is restored as per the G.O. cited under reference – 2. The same is to be implemented in the Board, benefitting the employees of the Board.

We earnestly pray the intervention of the Respected Chairman cum Managing Director for implementation of the said G.O in this regard, please.

**3. Lr.No.GS/TNEBES/F1/ D.05 /2025, Dt. 22.07.2025.**

Respected Sir,

Sub: Problems faced in new Generating Stations and Sub stations due to non-sanctioning of new posts – Detrimental orders needs to be withdrawn or exempted for Board - Praying intervention of respected Chairman cum Managing Director - Requested - Regarding.

Ref : (Per) FB TANGEDCO Proceedings No. 2, Dated: 12.04.2022.

Tamil Nadu Electricity Board is one of the biggest organizations in Tamil Nadu benefitting the growth of the State by various means particularly having its direct impact on the growth of Industries and the General Public. The requirement of Electric Power grows every day and the Board is equipped to tackle it by envisaging the requirement. Respected Chairman cum Managing Director is very well aware of these facts.

To fulfill the requirements and needs of the Industries and the General Public the Power Network is improved by widening, strengthening, modernizing the Generating Stations, Substations, Power Lines and other related areas.

In the recent past numerous Substations of various capacities and sizable number of Thermal Power Stations have been installed and commissioned which is a welcome sign. They are the reasons

for maintaining uninterrupted Power Supply by the Board during the peak summer too. But the pathetic condition is most of these Generating Stations and Substations are run without proper or in adequate Man Power as New Post Sanction for these Generating Stations and Sub stations couldn't be made.

The reason for this is the orders cited under reference particularly the final 2 clauses which says ***"No new posts be created at any levels in TANGEDCO without prior approval of the Government"*** and moreover ***"In case of emergency the need for creation of new posts, necessary proposals be forwarded to the Government duly surrendering some other posts".***

The above 2 clauses in the cited order is totally detrimental for us, towards sanctioning of New Posts and hindering its process. Vehement protests have been made by our Sangam and other Unions to withdraw this orders ever since its implementation. But nothing fruitful has happened even though few clauses in the orders are muted.

The hue and cry against this order is not for the purpose of our wellbeing rather for the wellbeing of the Board. Government shouldn't treat Tamil Nadu Electricity Board on par with other Sister Organizations in the State as our functioning is totally different to others. We feel this dissimilarities is not being properly put forth to the Government by our Board Officials yet.

Problems faced due to non-sanctioning of posts for the Generating Stations and Substations are enumerated below

- The progress of work in the Generating Stations which are under erection is getting slowed down due to in adequate manpower.
- The progress of work in the Generating Stations which have completed erection and in the process of commissioning have been totally stalled or slowed down due to lack of manpower for both shift duties and maintenance works.
- Absence of Board Employees during commissioning activities will affect the Plant during regular operation.
- The minimum posts presently in these new Plants are by redeployment from existing Power Stations affecting the works in both Plants
- Similar situation exists in the newly commissioned Sub stations also where due to lack of manpower, work is being carried out on temporary arrangements from nearby circles affecting Board works in the both the places.
- Guarantee for Board's property could not be ensured in these Sub stations with the temporarily arranged manpower as they aren't equipped or trained to do it.
- Safety and wellbeing of the Operating Personnel and Maintenance wing could not be ensured as they are posted temporarily without proper training.
- In case of accidents it is not only going to affect the Personnel but the Board property too where crores of rupees are invested.

It is needless to say more than this as our respected Chairman cum Managing Director himself has witnessed the conditions in various Substations in all corners during his visit personally for which we are very much thankful. We expect these conditions to change and to be settled early.

Owing to all these difficulties we pray the respected Chairman cum Managing Director to take necessary steps to withdraw the order cited under reference else to exempt our Board from the final 2 clauses which are detrimental towards new post sanction, for the wellbeing of our Board please.

**4. Lr.No.GS/TNEBES/F1/ D.06/ 2025, Dt. 22.07.2025**

Respected Sir,

Sub: AEE / Civil Promotions issued for meagre numbers – Most individuals in JE I Grade category were ineligible due to minimum cap of Service – Request relaxation in eligibility for JE I Grade category – Fresh calling for Requested – Regarding.

Ref: 1. Letter No. 046120/G.2/G.2(1)/2024-4, Dated: 14.02.2025.

2. Memo No. 046120 / G.2 / G.2 (1) / 2024-13, Dated: 30.05.2025.

Suitability report was called among 56 persons for promotion to the post of Assistant Executive Engineer / Civil vide reference - 1 cited above and Promotion Orders were issued for 9 persons vide reference - 1 cited above.

The ratio of 3:1 among Assistant Engineer / Junior Engineer I Grade is being applied for this promotion also as per the Service Regulation. Also for the Junior Engineer I Grade category the regulation stipulates a minimum service period of 7 years in the post of Junior Engineer I Grade for becoming eligible for Assistant Executive Engineer / Civil Promotion. This isn't the case for Assistant Executive Engineer / Electrical and Mechanical Promotions.

Among the 13 Junior Engineer I Grade in the called for list cited under reference - 1, only 2 persons had completed 7 years of service in Junior Engineer I Grade category on the crucial date of 05.06.2024. Hence only 9 persons were promoted which is very meager and wouldn't solve the purpose. Most of the posts in Assistant Executive Engineer / Civil is lying vacant in all areas affecting the Board works.

**Fresh calling for is to be made relaxing this minimum period of service for Junior Engineer I Grade category by 2 years and fixing it as 5 years instead of 7 years. This would be very much beneficial for the Board and the individuals too. More over we would like to add that similar relaxation in Service Regulation has been done earlier too for few other categories.**

Such a relaxation wouldn't be detrimental to the Board as these individuals have put up quite a good amount of service in their earlier category of Junior Engineer II Grade itself which is quite sufficient. More over very meager number of persons only available in the post of Junior Engineer / Civil I Grade.

We sincerely request the respected Chairman cum Managing Director to kindly consider our genuine representation, do the needful for relaxing of Service Regulation for just 1 time and make fresh calling for to the post of Assistant Executive Engineer / Civil promotions and thus render justice please.

Thanking You, Sir,

Yours Sincerely,

**(V.S. SAMPATHKUMAR)**

General Secretary.

**BOARD ORDER**

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

(ABSTRACT)

Travelling Allowance Minimizing the financial stress arising out of COVID 19 Reduction in the quantum of Daily Allowance by 25% Orders issued by the Government - Adoption in TNPDCL-Orders-Issued. Restriction revoked

(SECRETARIAT BRANCH)

(PER) FB TNPDCL PROCEEDINGS NO.25. DATED THE 20TH JUNE, 2025.
Aani-6, Visuwavasu Varudam,
Thiruvalluvar Aandu-2056.

**READ:**

**1.** G.O.(Ms) No.249, Finance (Budget General-1) Department, dt.21.05.2020.

2. From the Principal Secretary to Government/Energy (82) Department, Letter No.2564/82/2020-1, dated 14.09.2020.

3. Memo. No. 39105/A18/A181/2018-5 (SB), dt. 22.12.2020.

4. G.O.Ms.No.178, Finance (Budget General-1) Department, dt. 20.06.2022.

**PROCEEDINGS:**

While clarifying certain points on allowing Travelling Allowance to the officials performing tours within the corporation limits, the Government in its letter second read above, had mentioned the following cost control measures imposed by the Government in view of huge shortfall in the receipts due to COVID-19 Pandemic and consequent measures to contain the pandemic as per G.O.(Ms) No.249, Finance (Budget General Department, dated 21.05.2020:

i. The permission for official travel should be given judiciously and restricted only to absolutely essential official requirements and regular review meetings can be organized through Video Conferencing and tele-conferencing in a secure environment.

ii. The permissible rates of Daily Allowance shall be reduced by 25%. Only 75% of eligible amount shall be allowed to be drawn subject to rounding off to next 10 rupees for all categories of officials/non-officials.

The said Government's letter was communicated to all the officers of TANGEDCO (now TNPDCL) for strict adherence - vide Memo. third read above.

2. Later on, the restrictions imposed in G.O. first read above, were partially relaxed by the Government vide G.O. fourth read above, wherein among others, the restriction on "Allowing full Daily Allowance and restricting it by 25%" has been completely relaxed and certain austerity measures were ordered to be continued. After thorough examination of the issue, it has been decided to relax the said restriction in TNPDCL.

3. Accordingly, it is hereby ordered that the restriction imposed on allowing Daily Allowance to 75% (25% cut) in the Travelling Allowance bills of employees of TNPDCL (erstwhile TANGEDCO), be relaxed with effect from 20.06.2022, i.e. the date of issue of G.O. fourth read above.

(BY ORDER OF THE BOARD)

**J. RADHAKRISHNAN,**
**CHAIRMAN AND MANAGING DIRECTOR.**

# CHAIRMAN'S LETTER

From the Desk of the CMD, TNEB Ltd.
Dr.J.Radhakrishnan, IAS
Date: 04.07.2025

Dear all,

Subject: Immediate Drive for safety and Cleanliness Around Electrical Installations and Monitoring of Road Cut Activities

While we are ensuring preventive measures across most locations, a few observations made during my early morning inspection warrant immediate attention. Kindly note the following instructions for strict compliance and necessary action.

**1. Clean-Up Drive Around Electrical Installations**

- Initiate a focused drive to clear garbage dumped around transformers, junction boxes, and, in rare cases, substation premises, especially by residents or establishments nearby.
- Such garbage accumulation poses a serious risk of accidental fires and must be addressed on priority.
- Kindly give a drive this weekend to the above works, with proper planning and deployment of teams.

**2. Monitoring Road Cut Activities and Ensuring Accountability**

- Closely monitor ongoing road cut and excavation works carried out by civic bodies and other agencies.
- Take stringent action in cases where there are no barricades or assurances that underground cables will not be damaged.
- These activities should be taken up in coordination with local bodies and agencies undertaking such works.

**3. Action on Unused or Damaged Junction Boxes**

- Remove and shift unused or condemned junction boxes to designated locations for auction as scrap.
- Replace damaged and rusted junction boxes as part of routine safety and aesthetic improvements.

**4. Coordination and Safety Compliance**

- Ensure close coordination with local bodies and agencies executing road or civic works.
- Follow all necessary safety precautions while clearing debris or handling installations to avoid any accidents.

**Let us ensure that this special drive reinforces public safety, prevents avoidable incidents, and reflects our commitment to proactive and responsible service delivery.**

With best wishes,
**Dr.J.Radhakrishnan, I.A.S.**
Chairman & Managing Director
TNEB Ltd.

## 57 வது மாநில பொதுக்குழு கூட்டம்

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 57 வது மாநில பொதுக்குழு கூட்டம் 14.06.2025 மற்றும் 15.06.2025 ஆகிய இரண்டு தேதிகளில், தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சாவூரில் உள்ள கிரீன் சிட்டி வளாகத்தில், தலைவர் பொர்.A.அந்தோனி படோவராஜ், மாநிலத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

14.06.2025 அன்று காலை 10.30 மணிக்கு பொதுக்குழு கூட்டம், கொடியேற்றம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கடந்த ஆண்டில் மறைந்த சங்க உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் பொறுப்பாளர்களுக்கு இரங்கல் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து தஞ்சை மண்டலச் செயலாளர் பொர்.P.சுந்தர் வரவேற்புரை ஆற்றினார்.

அவரைத் தொடர்ந்து மாநிலத் தலைவர் பொர்.A.அந்தோணி படோவராஜ் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். அவரது உரையில், தஞ்சை மண்டலம் உருவாகி மூன்றே ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், மூன்று கிளைகளை மட்டுமே கொண்ட, தமிழகத்தின் நெற்களஞ்சியம் மற்றும் இராஜராஜ சோழன் ஆண்ட வீரம் செறிந்த தஞ்சை மண்டலம் இந்த பொதுக்குழுவை நடத்துவதின் மூலம் சங்கதிற்கு பெருமை சேர்த்துள்ளது என்றார்.

ஒருங்கிணைந்த தஞ்சை மண்டலத்தில் பங்களிப்பு செய்து சங்கத்தின் வரலாற்றில் இடம் பெற்ற பல மூத்த பொறியாளர்களை நினைவு கூர்ந்த அவர், அவர்களின் வழியில் இன்று இளையவர்கள் சங்கத்தை எடுத்து செல்வது சிறப்பு என்றார்.

கடந்த ஆண்டு கன்னியாகுமரியில் நடந்த பொதுக்குழுவிற்கு பின் சங்கத்தின் சிறப்பான திட்டமிடல் மற்றும் பெற்ற பதவி உயர்வுகள் குறித்து பெருமை கொள்ளவேண்டும் என்றார்.

வாரியம் மேலும் மூன்று கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளதை சுட்டிகாட்டிய அவர் எதிர்காலத்தில் நிகழப்போகும் மாற்றங்களை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும் என்றார்.

தொடர்ந்து பேசிய அவர் BP4 திருத்தியமைக்கப்பட்டது, நமது கோரிக்கைகளை பரிசீலித்து நடவடிக்கை எடுத்த நம் முன்னாள் வாரியத் தலைவருக்கு நன்றி செலுத்துவதுடன், இன்றைய வாரிய தலைவருடன் சங்கத்தின் உறவு சிறப்பாக இருப்பதாக கூறினார். உத்தரபிரதேசம், சண்டிகர் தனியார்மய ஆபத்தை கவனத்தில் கொள்ளவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கிளைப் பேரவை கூட்டங்களில் பெண்கள் உட்பட அனைவரும் சீருடை அணிந்து வந்து சங்கதிற்கு பெருமை சேர்த்த புதுகை, சிவகங்கை மற்றும் திருவாரூர் கிளைகளை பாராட்டிய அவர் மற்ற கிளைகளும் இதனை உதாரணமாக கொண்டு செயல்பட கேட்டுக்கொண்டார். கூடுதல் உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாக பேரவைக் கூட்டத்தை நடத்திய கோவை, உடுமலை, திருப்பூர் கிளைகள், அதிக உறுப்பினர்கள் பங்கேற்ற தஞ்சாவூர் கிளை பேரவை கூட்டம் ஆகியவற்றிற்கு பாராட்டு தெரிவித்தார்.

கடந்த 25.11.2024 அன்று எல்லா மண்டலங்களிலும் நடந்த மண்டலக் கூட்டங்களை பாரட்டிய அவர், அதிக பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்ட ஈரோடு மற்றும் மதுரை மண்டலங்களை வெகுவாக பாராட்டினார். 22.12.2024 அன்று திருச்சியில் நடைபெற்ற மாநில செயற்குழு நடைபெற்றதையும் அதன் பின் நடந்த நிகழ்வுகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாதாந்திரக் கூட்டங்கள் முதல் செவ்வாய்கிழமை அன்று பெரும்பாலான கிளைகளிலும், அடுத்த சில நாட்களில் மற்ற கிளைகளிலும் சென்ற ஆண்டு சிறப்பாக நடைபெற்றதை பாராட்டிய அவர், அதற்கு தொடர் முயற்சி எடுத்த மாநில அமைப்பு செயலாளரை மனதார பாராட்டினார்.

உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்திய கோவை மற்றும் தஞ்சாவூர் மண்டலங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி கிளை ஆகியவைகளை பாராட்டிய அவர், கிளை அளவில் தொடர் பயிற்சி வகுப்பு நடத்தும் திருவாரூர் கிளைக்கு தன் வாழ்த்தினை தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய மாநில தலைவர் ரத்ததான முகாம், கோபி, கிருஷ்ணகிரி, தேனி கிளைகளின் கட்டிட பூமி பூஜை, கரூர் மற்றும் கோவை கிளைச் செயலாளர்களின் சிறப்பான செயல்பாடு, சங்கத்தின் "Mission Safety Banner" ஆகியவற்றை நினைவு கூர்ந்த அவர், கடந்த ஆண்டில் ஒய்வு பெற்ற நம் பொறியாளர்களின் சங்கப்பணியினை நினைவு கூர்ந்தார். உடல் நிலையினை பொருட்படுத்தாமல் பெரும்பாலன கிளை ஆண்டு பேரவைக் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கிவரும்

சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் பொர்.K.சிங்காரவேலு அவர்களின் பங்களிப்பை நெகிழ்ச்சியுடன் விவரித்த மாநிலத் தலைவர் மற்ற சங்க முன்னோடிகள் பொர்.S.கண்ணன், பொர்.S.ராஜகோபால், பொர்.S.தனவேலு, பொர்.R.அழகுசபை மற்றும் ஏனைய மூத்த பொறியாளர்கள் சங்கதிற்கு அளித்திடும் ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்தார்.

அதுபோலவே சங்கத்திற்கு பலம் சேர்க்கும் ஒய்வு பெற்ற பொறியாளர் சங்க பொறுப்பாளர்களுக்கு பாராட்டு தெரிவித்த அவர் கடந்த ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட சங்கத்தின் அனைத்து மத்திய பொறுப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்து தன் தலைமை உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் பொர்.V.S.சம்பத்குமார் பொதுக்குழுவிற்கு அறிக்கையை சமர்பித்து பேசினார்.

பொதுக்குழுவில் புதிதாக பங்கேற்கும் அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் தன் வாழ்த்துகளை தெரிவித்த அவர், மிகச் சிறப்பாக பொதுக்குழுவை ஏற்பாடு செய்துள்ள தஞ்சை மண்டல பொறுப்பாளர்களை வெகுவாக பாராட்டினார். கடந்த ஆண்டில் சங்கம் பெற்ற பதவி உயர்வுகளை பட்டியலிட்ட அவர், வேறு எந்த சங்கமும் செய்ய முடியாத சாதனையை பொறியாளர் சங்கம் செய்துள்ளது என்று பெருமையுடன் கூறினார். இதற்காக பாடுபட்ட மாநில தலைவர், உறுதுனையாக இருந்த அனைத்து மையப் பொறுப்பாளர்களுக்கும் தன் நன்றியை தெரிவித்தார். இந்த இக்கட்டான சூழலிலும் சங்கம் பெற்றுள்ள பதவி உயர்வுகள் வரலாற்று சிறப்பு மிக்கது என்று கூறிய அவர். இந்த சாதனைகள் சங்கத்தின் பாரம்பரியம் என்றும் அதற்கு ஆலோசனை வழங்கிய மூத்த பொறியாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் நினைவு கூறுவதாகவும் தெரிவித்தார்.

அமைப்பு ரீதியான செயல்பாடுகள் குறித்து பேசிய பொதுச் செயலாளர் கிளைகளில் மாதாந்திர கூட்டம் நடத்தியது, இருபால் உறுப்பினர்கள், சீருடை அணிந்து வந்து சங்கதிற்கு பெருமை சேர்த்த புதுகை, சிவகங்கை மற்றும் திருவாரூர் கிளை பேரவை கூட்டங்களை நினைவு கூர்ந்து பாராட்டிய அவர் கடந்த 01.12.2023 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வை முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கும் பெற்று தரவேண்டிய கடமை பொறியாளர் சங்கத்திற்கு இருக்கிறது என்று கூறினார்.

கடந்த ஆண்டில் பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த முடியாது போனாலும் இந்த ஆண்டு நிச்சயம் நடத்தப்படும் என்று உறுதியளித்தார்.

பயிற்சி வகுப்புகள் குறித்து பேசிய பொதுச்செயலாளர் சென்ற ஆண்டு உறுப்பினர்களுக்கு பயிற்சி வகுப்பு எடுத்த கோவை மற்றும் தஞ்சாவூர் மண்டலங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி கிளைகளை பாராட்டினார். கிளை அளவில் தொடர் பயிற்சி வகுப்பு நடத்தும் திருவாரூர் கிளைக்கு தன் வாழ்த்தினை தெரிவித்தார்.

இதுபோன்ற பயிற்சி வகுப்புகள் அனைத்து மண்டலங்களிலும் நடைபெற வேண்டும் என்றும் கூறினார்.

பாதுகாப்பு விழிப்புணர்வு சம்பந்தமாக சங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வாரியத்தால் பாராட்டப்பட்டதை எடுத்துரைத்த அவர், தூத்துக்குடி அனல் மின் நிலைய அலகு ஒன்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தை கட்டுக்குள் கொண்டு வந்த பொறியாளர்களை மனமார பாராட்டினார்.

கூட்டுகுழு நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசிய பொதுச்செயலாளர் அவர்கள் அதன் நடவடிக்கைகள் குறித்தும் அதில் சங்கத்தின் பங்கு குறித்தும் விரிவாக பேசினார். எதிர்காலத்தில் கூட்டுகுழுவில் நம் பங்கு குறித்தும் பேசினார்.

01.08.2024 அன்று வாரியத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் TA உள்ளிட்ட துவக்க நிலை பணி நியமனம், ஊதிய உயர்வு, ERP பிரச்சனைகள், போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து பேசப்பட்டதை விரிவாக எடுத்துரைத்தார்.

பதவி உயர்வுகள் குறித்து பேசிய பொதுச் செயலாளர் அவர்கள் கடந்த 28.11.24 அன்று 1000 நபர்களுக்கு (750+250) இளநிலை பொறியாளர் இரண்டம் நிலை பதவி உயர்வு பொறியாளர் சங்கத்தின் முயற்சியால் மட்டுமே பெறப்பட்டது என்றும், அதில் பலன் பெற்ற அனைத்து பொறியாளர்களையும் நமது சங்க உறுப்பினராக்க வேண்டும் என்றும் கோரினார்.

மேலும் JE-II மின்னியல், JE-II இயந்திரவியல் பதவி உயர்வுக்கான சங்க நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார். TA(Internal), AE (Internal) பதவிகள் பெற சங்கம் எடுத்துவரும் தொடர்

நடவடிக்கைகள் குறித்து பேசிய அவர் அவற்றை விரைவில் பெற சங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்துவருவதை சுட்டிகாட்டினார். JE-I Grade (Mech), JE-I Grade (Elect), AEE (Elec) பதவி உயர்வுகள் குறித்தும் அதனை பெற சங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் சட்ட ரீதியான அனுகுமுறை குறித்தும் கூறினார்.

நமது சட்டபோராட்டம் மற்றும் தொடர் முறையீடு காரணமாக கடந்த 28.3.2025 அன்று 211 பொறியாளர்களுக்கு JE-I (மின்னியல்) பதவி உயர்வு பெறப்பட்டதை பெருமையாக கூறிய அவர் AEE(M), AEE(C), EE(E) பதவி உயர்வுகள் குறித்தான சங்க நடவடிக்கைகளை விவரித்தார்.

தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம் அறிவிப்பு, அதில் உள்ள பிரச்சனைகள் குறித்து ஆலோசித்து முடிவு செய்யப்படும் என்றார். தொடர்ந்து சங்கத்தின் பல்வேறு முறையீடுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பஞ்சாபில் 12.12.2016 அன்று நடைபெற்ற விபத்தில் மரணித்த நம் மூன்று பொறியாளர்களின் வாரிசுகளுக்கு அவர்கள் 18 வயது பூர்த்தியானதைத் தொடர்ந்து, நிலுவையிலிருந்த காப்பீடு இழப்பு தொகையினை பெற்றுதரப்பட்டதை சங்கம் அவர்களுக்கு செய்த நன்றியாக கருதுவதாக கூறிய அவர், இத்தொகையினை பெற்று தர பெரிதும் உறுதுணையாக இருந்த பஞ்சாப் மாநில பட்டய பொறியாளர் சங்கப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். மேலும் ரத்ததான முகாம், முன்னாள் மத்திய பொறுப்பாளர்கள் முன்னாள் பொதுப்பொருளாளர் பொர்.G.கார்த்திகேயன் உள்ளிட்ட மையப் பொறுப்பாளர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழா குறித்து பெருமையாக பேசினார்.

கடந்த ஆண்டு தனக்கு உதவிய அனைத்து மையப் பொறுப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்த அவர் வரும் ஆண்டில் சங்கம் மேலும் சாதிக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்றும் கூறி தன் உரையினை நிறைவு செய்தார்.

பொதுப் பொருளாளர் பொர்.N.R.செந்தில் அவர்கள் 2024–25 ஆம் ஆண்டு வரவு செலவு அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பேசினார்.

ஆண்டு சந்தா மற்றும் ஆண்டு நன்கொடைகள் மாற்றியமைக்கப்பட்ட தொகையை அனைத்து கிளைகளிலும் பிடித்தம் செய்யப்பட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர் மேலும் புதிய உறுப்பினர் சேர்க்கையில் கிளைப் பொறுப்பாளர்கள் கவனம் செலுத்த கேட்டுக்கொண்டார். தான் சிறப்பாக பணிபுரிய உதவிட்ட அனைத்து பொறியாளர்களுக்கும் தனித்தனியே நன்றி கூறி தன் உரையை மன நிறைவுடன் நிறைவு செய்தார்.

அடுத்து செயலாளர்/வெளியீடு பொர்.U.ராஜேந்திரன் அவர்கள் அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பேசினார்.

கடந்த ஆண்டில் எப்போதும் போல் மின்அலை சங்க செய்திகள் அனைத்தையும் தாங்கி வெளிவந்ததையும், அது பொறியாளர்களின் பொக்கிஷம் என்றும் கூறினார். சங்கச் செய்திகள் மட்டுமின்றி உறுப்பினர்களின் அனைத்து செய்திகளையும் பிரசுரிக்கும் மின்அலை பல்வேறு கட்டுரைகளை பிரசுரிப்பது, சங்க உறுப்பினர்களை தாண்டி எல்லோராலும் பாராட்டபடுவதை எடுத்துரைத்தார்.

மாத வாரியாக மின் அலை செய்திகளை பற்றி விரிவாக பேசிய அவர் மின் அலை மேலும் பொலிவு பெற உறுப்பினர்கள் ஆதரவு தேவை என வேண்டுகோள் வைத்து தன் உரையை நிறைவு செய்தார்.

அடுத்து செயலாளர்/காமதேனு நலநிதி பொர்.R.சந்தோஷ்குமார் அவர்கள் காமதேனு நலநிதி அறிக்கையினை அவைக்கு தாக்கல் செய்து பேசினார்.

காமதேனு நலநிதி சங்கத்தின் உயிர் என்றும், சங்கத்தின் நலநிதி, உறுப்பினர் இறந்துவிட்டால் நலநிதி விரைந்து வழங்கப்படுவதால், அக்குடும்பங்கள் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவு வெளிவர முடிகிறது என்று நலநிதியின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். KBF VI திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற 3000 உறுப்பினர்களை கிளைகள் விரைந்து சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு தன் உரையை நிறைவு செய்தார்.

மேற்கண்ட அனைத்து அறிக்கைகள் மீதும் தங்கள் கருத்துக்களை கீழ் கண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டு பேசினார்கள்.

பொறியாளர்கள்.K.கனகராஜ்/செங்கல்பட்டு, S.அன்புசெல்வன்/நாகை, S.நல்லமுத்து/கோபி, P.பசுபதி/சேலம், T.விஜயராகவன்/MTPS, C.ராஜா/நாமக்கல், K.கார்த்திகேயன்/சென்னை மேற்கு, T.கணேசன்/விருதுநகர், T.சரவணகுமார்/NCTPS, T.ஜெயவர்மன்/மேட்டூர், S.முருகன்/விழுப்புரம், M.இளவழகன்/கடலூர், S.செந்தில்முருகன்/சென்னை தெற்கு, S.விநாயகம்/வேலூர், R.S.சுமின்ராஜ் /கன்னியாகுமரி, R.மைக்கேல்ராஜ்/தூத்துகுடி, A.பாலமுருகன்/நீலகிரி, G.கோபி/கரூர், M.ஜான்பிரிட்டோ/ திண்டுக்கல், P.ருத்திராபதி/பெரம்பலூர், P.நட்டார்ராஜா/TTPS ஆகியோர் விவாதத்தில் பங்கேற்று தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு பொதுச் செயலாளர் மற்றும் பொதுப் பொருளாளர் ஆகியோர் பதிலளித்து பேசிய பின் அனைத்து அறிக்கைகளும் பொதுக்குழுவால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மூத்த பொறியாளர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் அதற்கு பின்னர் 2025–26 ஆம் ஆண்டிற்கான புதிய மையப் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

பொதுக்குழு அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

---

## இரண்டாம் நாள் நிகழ்வுகள்

15.6.25 அன்று காலை 8.30 மணிக்கு மையப்பொறுப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் பொதுக்குழுவில் முன்மொழியப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் பொதுக்குழு காலை 10.30 மணிக்கு துவங்கியது, மாநில தலைவர் அவர்கள் இரண்டாம் நாள் நிகழ்வில் பொதுக்குழு எடுக்க வேண்டிய முடிவுகள் குறித்து பேசினார். தொடர்ந்து பேசிய பொதுச் செயலாளர் காலையில் நடைபெற்ற மையப்பொறுப்பாளர்கள் கூட்டம் குறித்தும் அதில் விவாதிக்கப்பட்டவை குறித்தும் அவைக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மையப்பொறுப்பாளர்கள் கூட்டம் பரிந்துரை செய்த தீர்மான வரைவை அவைக்கு தாக்கல் செய்த அவர், இதன் மீதான கருத்துக்களும், மேலும் தீர்மானங்கள் குறித்தான கருத்துகளையும் வேண்டினார்.

பொதுப் பொருளாளர் பொர்.N.R.செந்தில் அவர்கள் சங்க கிளைகளின் வரவு செலவு கணக்குகளை மாதந்தோறும் முடித்து மையப் அமைப்பிற்கு அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும், இதற்காக ஒரு தனி செயலியை உருவாக்க வேண்டிய காலகட்டத்தில் பொறியாளர் சங்கம் இருப்பதாகவும் கூறினார். எதிர்கால நீதிமன்ற வழக்குகளை எதிர் கொள்ள சங்கதிற்கு அதிக நிதி தேவை என்பதால் சங்கத்தின் பொருளாதாரம் வலுவாக இருப்பது அவசியம் என்றார்.

தொடர்ந்து பேசிய முனைவர் சா.சம்பத், மாநில அமைப்பு செயலாளர் மற்றும் AIFOPDE தென் மண்டல தலைவர் அவர்கள், கடந்த ஆண்டில் சங்கம் அங்கம் வகிக்கும் AIFOPDEயின் செயல்பாடுகள் குறித்தும், சண்டிகார் மின் வாரியம் தனியாருக்கு தாரை வார்க்கபட்டதையும், தொடர்ந்து உத்தரபிரதேச மின்வாரியம் தனியாருக்கு போக இருப்பதையும் தெளிவாக கூறிய அவர் இனிவரும் காலங்களில் சங்கப் பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் தங்கள் திறமையை வளர்த்துக்கொண்டால் மட்டுமே நம் வாரியத்தை காப்பாற்ற போராட முடியும் என்றும். தற்போதைய மின்சார சட்ட திருத்த மசோதா நிலை குறித்தும் அதில் AIFPODE பங்கு குறித்தும் விரிவாக பேசினார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் தாக்கல் செய்த தீர்மானங்கள் மீதும், புதிய தீர்மானங்களை வலியுறுத்தியும் கீழ்கண்ட பொதுக்குழு உறுபினர்கள் பேசினார்கள் .

பொறியாளர்கள் R.பாலகிருஷ்ணன்/NCTPS, K.முத்துகிருஷ்னன்/புதுக்கோட்டை, S.துரைராஜ்/ தேனி, K.சரவணன்/காடம்பறை, G.கோபி/கரூர், K.ரவிக்குமார்/விழுப்புரம், G.ராதாகிருஷ்ணன்/காஞ்சி, T.தனகோட்டி/திருப்பத்தூர், R.ஞானபழனி/கடலூர், சையத் முஸ்தபா/கள்ளக்குறிச்சி, K.கண்ணன்/ திருவாரூர், G.சுதாகர்/ வேலூர், R.ஜெகதீஷ் கிருஷ்ண செல்வம்/நெல்லை, K.ஞானப்பிரகாசம்/கோவை, S.சுரேஷ்ராஜ்/திருப்பூர், S.நல்லமுத்து/கோபி, J.மதன்/TTPS, P.ருத்ராபதி/பெரம்பலூர், K.சுரதா/ தூத்துக்குடி, P.கமல்குமார்/நீலகிரி ஆகியோர் பேசினர்.

விவாததிற்கு பின் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டன. நிகழ்வில் தன்னார்வலர்கள், தஞ்சை மண்டல பொறுப்பாளர்கள் மற்றும் அனைவரும் சங்கத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

பொதுக்குழுவிற்கு உதவிய அனைவருக்கும் தலைமை நிலைய செயலாளர் பொர் P.M.மாரியப்பன் அவர்கள் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவிக்க தேசிய கீதம் பாடி பொதுக்குழு நிறைவு பெற்றது.

# 57 வது பொதுக்குழுவின் தீர்மானங்கள்

தமிழ்நாடு மின்சாரவாரிய பொறியாளர் சங்கத்தின் 57வது மாநில பொதுக்குழு ஜுன் 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் தஞ்சாவூரில் மாநிலத் தலைவர் பொர்.A.அந்தோணிபடோவராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொதுக்குழுவில் கீழ்கண்ட தீர்மானங்கள் இயற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. மாண்புமிகு மின்துறை அமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் அமைச்சர் திரு.S.சிவசங்கர் அவர்களுக்கு இப்பொதுக்குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.
2. பொறியாளர் சங்கத்தின் நெடுநாளைய கோரிக்கையை ஏற்று புதிதாக தொழில்நுட்ப உதவியாளர் மின்னியல் பணிக்கு தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் (TNPSC) 656 நபர்களுக்கு நேரடி நியமன தேர்வுக்கான அறிவிப்பு வெளியிட்டமைக்கு தமிழ்நாடு அரசிற்கும், மின்வாரியத்திற்கும் இப்பொதுக்குழு நன்றியினை தெரிவித்துக் கொள்ளுகிறது.
3. தூத்துக்குடி மாவட்டத்தில் புதிதாக 600 மெ.வா அனல் மின் நிலையம் அமைத்திட தமிழ்நாடு அரசு அறிவித்ததற்கு அரசுக்கு பாராட்டுதல்களை இப்பொதுக்குழு தெரிவித்துக் கொள்கிறது.
4. தற்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனத்தில், நாற்பது ஆண்டு காலமாக தமிழ்நாடு மின்வாரியத்தில் நடைமுறையில் இருந்த, தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை பட்டயம் படித்த பொறியாளர்களை மட்டுமே கொண்டு நேரடி நியமனம் செய்து வந்ததை மீண்டும் கடைபிடித்திட வாரியத்தையும், தமிழ்நாடு அரசையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
5. தமிழகத்தில் வளர்ந்து வரும் மின் தேவையை கருத்தில் கொண்டு, நடப்பில் உள்ள மின் உற்பத்தி திட்டங்களை (On Going Projects) விரைவுப்படுத்திடவும், மின் கட்டமைப்பினை மேம்படுத்திடவும், புதிய மின் வழித்தடங்கள், துணை மின் நிலையங்களை நிறுவிடவும் உரிய நிதியை உடனே ஒதுக்கிட தமிழக அரசையும், மின்வாரியத்தையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
6. விநியோக வட்டங்களில் சீரானபணிகள் தொடர்ந்திட, காலியாக உள்ள துவக்க நிலை பதவிகளான களப்பணி உதவியாளர், தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளை உடனே நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அரசையும் வாரியத்தையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
7. 01.12.2023 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வினை வழங்க, தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
8. மின்வாரியத்தில் 65 ஆண்டுகளாக நடைமுறையில் பின்பற்றப்படும், Class III & IV பணியாளர்களுடன் இணைந்தே Class I & II பணியாளர்களுக்கும் நான்காண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வரும் ஊதிய உயர்வை தொடர்ந்து வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
9. 01.04.2003 முதல் வாரியத்தில் பணியேற்று உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்திட இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
10. வாரியத்தில் Smart Meter பொருத்துவதில், வாரியத்திற்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படுத்திடும் Tapex முறையை கைவிட்டு Capex முறையினை பின்பற்றிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
11. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டு, பல கோடி ரூபாய் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டு, செயல்பாட்டில் இருக்கின்ற, பதவி அனுமதிகள் வழங்கப்படாத அனைத்து துணை மின் நிலையங்களுக்கும் நடைமுறையில் உள்ள

ஒப்பந்தத்தின்படி உரிய பதவிகளை உடனடியாக அனுமதித்திட இப்பொதுக்குழு வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

12. 14 ஆண்டுகள் ஒரே பணிநிலையில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் அடுத்த உயர் பதவியில் சார்பு நிலை (NI) பெயர் மாற்றம் வழங்கிட இப்பொதுக்குழு வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

13. வாரியத்தில் 35 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வந்த உள்முகத் தேர்வை ரத்து செய்த வாரிய ஆணை 05, நாள்:07.06.2022ஐ திரும்பப் பெற்றிட வாரியத்தை மீண்டும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

14. மின்விநியோக வட்டங்களில், RDSS உள்ள பல திட்டபணிகளை செயல்படுத்துவதற்கும், மேற்பார்வையிடவும், ஒவ்வொரு விநியோக வட்டத்திற்கும் தேவையான பிரிவு மற்றும் உபகோட்ட பதவிகளை உருவாக்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

15. அனல் மின் நிலையங்கள் Base Load உற்பத்தியை கணக்கில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. சமீபகாலமாக அனல் மின் நிலையங்களை Peak Load உற்பத்தி நிலையம் போல் பாவித்து அடிக்கடி உற்பத்தியை நிறுத்துவதும் மீண்டும் உற்பத்தியை தொடங்குவதும் (Frequent Tripping & Light up) கொதிகலன், சுழலி மற்றும் முக்கிய பாகங்களில் பழுது ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அனல் மின் நிலையத்தின் ஆயுட்காலத்தை குறைத்து மின் நிலையத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்படகாரணமாக அமையும். எனவே இந்த நடைமுறையை (Frequent Tripping & Light up) உடனே கைவிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

16. வட்ட அளவில் பயன்படுத்தி வருகின்ற கனரக வாகனங்கள் தன் ஆயுட்காலத்தை கடந்த/ கடக்கும் நிலையில் உள்ளதால் தளவாட பொருட்களைக் கொண்டு செல்வதற்கான மாற்று வழிக்கான ஒப்புதலை வழங்கிட இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

17. வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டு, அன்றாட அனைத்து வாரிய களப்பணிகளையும் மேற்கொண்டு வரும் கேங்மேன் பிரிவினருக்கும் மற்ற RWE பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து சலுகைகளையும், வழங்கிட வலியுறுத்தி இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

18. களச் சூழ்நிலையை அறியாமல் தன்னிச்சையாக முடிவெடுத்து, வாரியத்தால் வெளியிடப்பட்ட Re-deployment உத்தரவுகளை உடனடியாக திரும்பப் பெற இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது.

19. சுமார் 8,000க்கு மேல் பயன்பாட்டில் உள்ள RMU-க்களை பராமரிப்பதற்காகவும், பழுது நீக்குவதற்காகவும் அதற்கான தனிபிரிவை உருவாக்கிட இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

20. மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய தலைமை அலுவலகங்களில் உள்ள மருத்துவ சிகிச்சை மையங்களில், காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் பணியிடங்களை நிரப்பி, மருத்துவ சிகிச்சை மையங்களை முழு அளவில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வாரியத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

21. விநியோகப் பிரிவு களப்பணிகளில் எளிதாகவும், வேகமாகவும் பணிகளை மேற்கொள்ள நவீன கருவிகள் கொண்ட வாகனத்தை வழங்கும்படி வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

22. விநியோக பிரிவுகளில், மின்தடை நீக்க பணிகளை எளிதாக்கவும், பொது மின்தடை நீக்க பணிகளில் பொது மக்களிடம் நன்மதிப்பை பெற்றிடவும், விநியோகப் பிரிவு பணியாளர்களுக்கு சிம்கார்டு வழங்கிடவும் வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

23. விநியோகப் பிரிவு அலுவலக பணிகள், கணினி மயமாக்கிவிட்ட நிலையில் ஒவ்வொரு பிரிவு அலுவலர்களுக்கு கூடுதலாக User மற்றும் ஒரு LT Billing ERP User வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

24. மின்வாரியத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து, ஓய்வு பெறும் நாளன்று மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் விதத்தில், விழிப்புப்பணி புகார், துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளை, இறுதி நாள்வரை முடிக்காமல் தாமதப்படுத்தும் நடவடிக்கைகளை மாற்றி, முன்னதாகவே அனைத்து நடவடிக்கைகளை முடித்து, பணியாளர்கள் பணி ஓய்வு நாளன்று, மனநிம்மதியுடன் பணி நிறைவு பெற்றிட ஆவண செய்யுமாறு வாரியத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

25. பணியாளர்கள் பணி ஓய்வு இறுதி மாதத்தில் வரும் விழிப்புப்பணி புகார் மனுக்களை அவரது பணி ஓய்வுக்கு பிறகு விசாரித்திட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

26. ஓய்வு பெற்ற மின்சாரவாரிய பணியாளர்கள் மறைவிற்குப் பிறகு ஈமச்சடங்கிற்காக குடும்பநல பாதுகாப்பு நிதியிலிருந்து (FSFS) வழங்கப்படும் தொகையினை நிலுவையில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் உடனடியாக வழங்க வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

27.01.01.2024 முதல் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ரூபாய் 20 லட்சத்திலிருந்து, ரூபாய் 25 லட்சமாக தமிழக அரசால் உயர்த்தப்பட்ட பணிக்கொடையினை உடனடியாக வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

28.கொரோனா காலத்தில் 75 விழுக்காடாக குறைக்கப்பட்ட படிகளை (TA & DA) 100 விழுக்காடாக உயர்த்தி தமிழக அரசு அலுவலர்களுக்கு வழங்குவது போல, வாரிய பணியாளர்களுக்கும் மீண்டும் வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது

29.விநியோக வட்டங்களில் உள்ள அனைத்து உபகோட்டங்களுக்கும், ஆய்வு பணிகளை மேற்கொள்ள ஒரு வாகனம் வழங்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

30.திருமக்கோட்டை எரிவாயு சுழலி மின் உற்பத்தி நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட மின் உற்பத்தியினை மீண்டும் துவக்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

31. புனல் மின் வட்டங்களில் விருப்ப மாறுதல் உத்தரவு பெற்று நீண்ட காலமாக விடுவிக்கப்படாமல் உள்ள பொறியாளர்களை உடனடியாக விடுவிப்பு செய்ய, அப்பணியிடங்களை மாற்று (Immediate Substitute) பொறியாளர்களை கொண்டு நிரப்பிட இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

32.புனல் மின் உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் மிகக் கடுமையான சூழலில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு அடிப்படை தேவையான குடியிருப்பு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் போதுமானதாக இல்லை. போர்க்கால நடவடிக்கையில் குடியிருப்புகளை புனரமைத்திடவும், சுகாதாரமான குடிநீர் வழங்கிடவும், போதுமான மருத்துவ வசதிகளை வழங்கிடவும் மின்வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

33.வாரியப்பணியில், விபத்து ஏற்படும் பொழுது, நமது பணியாளர்கள் மீது FIR பதிவு செய்வதை நிறுத்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

34.வருங்காலங்களில் எரிசக்தியில் Hydrogen முன்னிலையில் வரும் நிலையில், நமது நிறுவனத்தில் Hydrogen Based Power Plant யை நிறுவிட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்திட வாரியத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

35.நமது நிறுவனத்தில் நமது பொறியாளர்களால் இணங்கானப்பட்டு, திட்டம் தயாரித்து வைக்கப்பட்டுள்ள சிறிய புனல் உற்பத்தி நிலையங்களை நமது நிறுவனமே நிறுவி இயக்கிட வாரியத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

36.தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் அலகு (1) மற்றும் அழகு (2)னை உடனடியாக புனரமைத்து மின் உற்பத்தியை துவக்கிட வாரியத்தை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

–பொதுச் செயலாளர்

# காலந்தோறும் நன்றி

1979, ஆகஸ்ட் (08/1979) அன்று மின் வாரியத்தில் டிப்ளமாதாரர்களுக்கு ஒரு பொன்னாள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் – முதல் முதலாக – பட்டயப் பொறியாளர்கள் சுமார் 580 பேர் நேரடி நியமனத்தில் பணியில் சேர்ந்த நிகழ்வு. இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும்.

அன்றைய டிப்ளமாதாரர் முன்னோடிகளின் சிறந்த திட்டமிடலால் போராட்டத்தால் தியாகத்தால் விளைந்த விளைச்சல் அது அன்றைய தினம் பணியில் சேர்ந்த பட்டயப் பொறியாளர்கள் அனைவரும் வயது மூப்பின் காரணமாக வாரியப் பணியிலிருந்து பணி நிறைவு பெற்று விட்டார்கள் என்பது சிறப்பு.

நாகப்பட்டினத்தில் கிணற்றுத் தவளையான எனக்கு TESTER II grade (MRT) விழுப்புரம் என்று பணி நியமன ஆணை வந்தது விழுப்புரத்தை தேடிக் கண்டுபிடித்து MRT ல் பணிக்கு சேர 04/08/1979ல் சென்றேன். அங்கிருந்த AE/MRT அவர்கள் 'ஏற்கனவே நான்கு பேர் இங்கு சேர்ந்து விட்டார்கள் ''உனக்கு இடமில்லை'' என்று சொல்லிவிட்டார். சரி நமக்கு வேலை கிடைக்கவில்லை' என்று நினைத்துக் கொண்டு அவசர அவசரமாக விழுப்புரம் SE officeக்கு ஓடினேன். SE இல்லை, ரிசப்ஷனிஸ்ட் என்னை EE/general இடம் விட்டார். EE/Gen அவர்கள் "விழுப்புரம் MRT இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்களா, சரி வேறு எங்கு செல்கிறாய்? என்று கேட்டார். எனக்குத் South Arcot பற்றித் தெரியாது என்னுடைய சொந்த ஊர் நாகப்பட்டினம் சென்று வருவதற்கு வசதியாக சிதம்பரம் போட்டுக் கொடுங்கள் என்று சொன்னேன் சிதம்பரத்துக்கு போட முடியாது என்று சொல்லிவிட்டார் அப்படியானால் சென்னை சென்று வருவதற்கு வசதியாக ஏதாவது ஒரு ஊரில் போடுங்கள் என்று சொன்னேன் திண்டிவனம் தான் அருகில் உள்ளது அங்கு போடுகிறேன் என்று சொல்லி அவர் யாரையோ போனில் கூப்பிட்டு என்னுடைய ஆர்டரை விழுப்புரம் MRT யிலிருந்து மாற்றி திண்டிவனம் போட்டு சீக்கிரம் அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டார்.

நான் வெளியில் காத்திருந்தேன், அப்பொழுதுதான் எனக்கு நினைவுக்கு வந்தது, எனக்கு மின்வாரியத்தில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பது குறித்து Engineering Diploma Holders Association (EDHA) என்ற தலைப்பில் திரு.சதாசிவம் என்ற பொறியாளர் எனக்கு 15 பைசா கார்டு போட்டு வாழ்த்து தெரிவித்திருந்தார். அந்த கார்டை நான் கையில் வைத்திருந்தேன் ரிசப்ஷன்ல திரு.சதாசிவம் பற்றி கேட்டேன். அவர் இங்குதான் வேலை செய்கிறார் என்று சொல்லி அழைத்து சென்று திரு.சதாசிவத்திடம் சேர்த்தார். திரு. சதாசிவம் அவர்களுக்கு வணக்கமும் நன்றியும் சொல்லிவிட்டு, திண்டிவனத்திற்கு எனக்கு ஆர்டர் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதையும் சொன்னேன். அவர் "இப்ப SE வந்துவிட்டார், அவரை courtesy call பார்த்துவிட்டு வா."என்று சொல்லி appointment slip எழுதிக் கொடுத்தார் 'மதியம் ஒரு மணி வாக்கில் நான் SE/Villupuram chamberக்குள் நுழைகிறேன். SEக்கு பெரிய வணக்கம் சொல்லிவிட்டு நடந்த விஷயங்களை கூறினேன் அவர் உடனே என் கையில் வைத்திருந்த ஆர்டரை வாங்கி AE/MRT/Villupuram - Accept the joining report என்று instruction எழுதி "இந்த விழுப்புரம் MRTயிலேயே நீ போய் சேர்" என்று சொல்லி அனுப்பி வைத்தார். நானும் திரு.சதாசிவம் அவர்களிடம் சொல்லிவிட்டு தலைதெறிக்க ஓடி 'மதியம் மூன்று மணிக்கு விழுப்புரம் MRT–யில் TESTER II grade ஆக பணியில் சேர்ந்தேன் Cadre war union எனக்கு ஏற்பில்லை உடன்பாடு இல்லை என்றாலும் முன் பின் தெரியாத எனக்கு Diploma Holder என்ற ஒரே காரணத்துக்காக EDHA பொறுப்பாளர் காட்டிய அரவணைப்பால் EDHAவில் உறுப்பினரானேன். அடுத்த ஆண்டில் நான் Joint Secretary.

அன்று பிடித்த மாரத்தான் ஓட்டம் Tester 2 grade, Commercial Inspector, AE, AEE, EE, SE என 38 ஆண்டுகால படிப்படியான நீண்ட பயணத்திற்குப் பிறகு 31/07/2017 அன்று **SE**/ கரூர் ஆக பணி நிறைவு பெற்றேன்.

31/07/2017 அன்று மாலை அந்த SE/ Karur- chamberஐ விட்டு நான் வெளியே வந்த போது 04/08/1979 அன்று நான் SE விழுப்புரம் Chamberக்குள் நுழைந்த அந்த நினைவு வந்தது. 1979 முதல் 2017 வரை சில தலைமுறைகள்–விஸ்வரூப வளர்ச்சி.

இந்த 38 ஆண்டு காலத்தில் எத்தனையோ மாற்றங்கள். அத்தனை மாற்றங்களிலும் படிப்படியாக உயர்த்தி அழகு பார்த்த TNEB / EDHA / Engineers sangam மூவருக்கும் நன்றி.

இதோ–ஓய்வு பெற்று எட்டு ஆண்டுகள் ஆனாலும் நன்றி செலுத்துவது என்பது நிறைவு பெறாத ஒன்றாகும்...

**"வேருக்கு விழுதுகளின் நன்றி"**

**- பொர்.S. பாலசுப்ரமணியன்**
மேற்பார்வை பொறியாளர் / கரூர் (ஓய்வு)

## Share of clean energy in electricity still below 30%

India may have achieved an important milestone of sourcing 50% of its total electric power capacity of about 484 gigawatts, from non fossil-fuel sources, though publicly available data show that the share of clean energy in the electricity actually supplied is below 30%.

“India has achieved a landmark in its energy transition journey by reaching 50% of its installed electricity capacity from non-fossil fuel sources — five years ahead of the target set under its Nationally Determined Contributions [NDCs] to the Paris Agreement,” Pralhad Joshi, Minister for New and Renewable Energy, said earlier this week. “This significant milestone underscores the country’s steadfast commitment to climate action and sustainable development, and signals that India’s clean energy transition is not only real but also accelerating under the leadership of Prime Minister Shri Narendra Modi.

”In 2014, the share of renewable energy sources – solar, wind, biomass, hydropower (small and large) and nuclear power – constituted about 30% of India’s installed electricity capacity. As on June 30, 2025 – as per the Centre – it rose to 50%. However, the share of electricity generated from these sources rose from 17% in 2014-15 to 28% in the April 2024 to May 2025 period.

Experts say that despite the rise in clean energy, the slower increase in utilising clean energy was due to the “Capacity Utilisation Factor” (CUF), a measure of how much available energy was usable. CUF values for clean energy have been lower than that of coal or nuclear sources. “While solar and wind now make up a large share of installed capacity, their CUFs are much lower. Solar has CUF of approximately 20% and wind around 25-30%, compared to coal’s 60% or nuclear’s 80%. This means their contribution to actual generation remains limited despite high installed capacity,” said Arunendra Kumar Tiwari, Fellow, The Energy Resources Institute.

Base load demand, or power that is available through the day, is largely provided by coal, which makes up about 75% of India’s energy mix. While there was a rise in solar energy utilisation and easing demand on coal during the daytime, particularly in summer, was unavailable in the evening.“To improve utilisation of solar, we primarily need two things: flexibility in the grid and improved battery storage. Right now we pay the same (per unit) for electricity, whether night or day. Much like in the early days of telecom, when night calls were cheaper, we need to experiment with differential tarrifs for electricity during the day.

This however will require smart grids and better management,” said Saurabh Kumar, vice-president, Global Energy Alliance for People and Planet and an expert on energy, “We have several schemes that are being working on and in the next one or two years, I expect there will be significant improvement.

”In the days ahead, an increase in ‘hybrid’ power projects that combine solar, wind, hydro and storage elements to meet India’s growing peak and round-the-clock power needs are the way forward, says a policy note from the Institute for Energy Economics and Financial Analysis. “When paired with battery storage, these hybrids can store surplus energy and release it during peak demand hours, particularly in the evening. However, deployment is currently limited by challenges such as land-aggregation issues, lack of coordinated transmission planning, and high cost of storage components.”

**- The Hindu**

## Pension Isn't Charity but a legal right, Shouldn't be delayed even by a day: HC

srishti lakhotia @timesof india.com

Kolkata : Pension is not “an act of Charity” but a legal right of employees, Calcutta high court said while reprimanding Hooghly Chinsurah municipality for blaming technological lapses for a delay in releasing the pension of 148 people who retired as Group D workers. The court said the employees earned the right by putting in years of service.

Justice Gaurang Kanth said, “ Pension and other retiral benefits, once earned by an employee after rendering long and continuous service ought not be delayed even by a single day. Delay in such cases causes undue hardship to the retired employees who depend on these dues for their sustenance.:

He made the observation while hearing a petitioner's case who, along with 147 others was employed in 1991-92.

Their posts ---- coolie, dome, methor, trailorman and jharuyali – were later clubbed under one umbrella post of “conservancy worker'. All of them were treated as permanent employees and were to receive monthly pension. However, following the petitioner's retirement in 2023, her pension and other benefits were not released.

In 2021, Bengal municipalities adapted an e-pension portal. Data for this comes from an integrated online salary management system – the Urban Local Bodies Human Resources Management System – introduced in Aug 2017.

Despite change in names of traditional posts, retired employees didn’t feature on the portal. Directorate of local bodies submitted in court that the municipality failed to provide details of all Group D employees.Hence, pension and retiral benefits had not been released.

Court directed the municipality to submit all documents to the directorate within a week and the latter redesignate the employees within two weeks. Justice Kanth said any undue delay in disbursement of pension, “especially if occasioned by technological shortcomings or administrative lapses, is impermissible and contrary to the principles of equity, justice, and good governance”.

## திருமண வரவேற்பு அழைப்பிதழ்

மணமகள் வீட்டார்

திரு.N. சத்தியநாராயணன்
திருமதி. சித்ரா சத்தியநாராயணன்
தம்பதியரின் சீமந்த புதல்வி
சௌபாக்யவதி
**S. பவித்ரா,B.E., MBA.,**
**(Engineer Sales Support,**
**Rice Lake Weighing Systems India Ltd.,)**
என்கிற கன்னிகைக்கும்



மணமகன் வீட்டார்

திரு.G. செந்தில்வேலன்
திருமதி.S. தனலெட்சுமி
தம்பதியரின் மூத்த குமாரன்
சிரஞ்சீவி
**S. சுந்தரமாணிக்கம், M.E.,**
**(Assistant Manager, Royal Enfield)**
என்கிற வரனுக்கும்

திருமண வரவேற்பு, மங்களகரமான ஸ்ரீவிசுவாவசு வருடம் ஆவணி மாதம் 21–ம் தேதி (06–09–2025) சனிக்கிழமை மாலை 6.30 மணிக்குமேல் சென்னை, நன்மங்கலம், கோபால் நகர் மெயின்ரோடு, எண்.3/175 யில் அமைந்துள்ள ஸ்வர்ண சுதர்ஸன் ஹாலில் நடைபெறுவதால் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் : 04.09.2025 வியாழக்கிழமை
காலை 10.30 மணிக்குமேல் 11.30 மணிக்குள் நாகப்பட்டினம்,
வேளாங்கண்ணி மெயின்ரோடு, புத்தூர் பிரிட்ஜ் அருகில்
அமைந்துள்ள **M.M.** மஹாலில் நடைபெறும்

தங்கள் அன்புள்ள
N. சத்தியநாராயணன், B.E.,
Assistant Executive Engineer/TANTRANSCO/TNEB.
திருமதி. சித்ரா சத்தியநாராயணன், M.E.,
Instructor Technical, MIT Campus, Anna University

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

**மின் அலை வளர்ச்சி நிதியாக பொர். N. சத்திய நாராயணன்,** AEE/TANTRANSCO/TNEB
**சென்னை தெற்கு கிளை அவர்கள் ரூபாய்.5001/–அளித்துள்ளார், நன்றி**

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் 30.06.2025 அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. **Er. M.SIKKANDAR BASHA,** AEE / MM / VGTPS, Br. President / Ramnad Branch. 9655658167
2. **Er. P.R.ULAGAPPAN,** AEE/O&M/Thiruppuvanam, Br. President/Sivaganga Branch. 735805503
3. **Er. B.NEDUNCHEZHIYAN,** JE I/O&M/Paramanandal, Br.President /T.V.Malai Branch. 9487684433
4. **Er. G.GANGATHARAN,** AEE/O&M/T/Paramakudi, Vi. President/Ramnad Branch. 9443495482
5. **Er. R.ADHIMOOLAM,** AEE / Shift / 230KV SS / Gummidipoondi, Former GCM / Chennai HQ, Chennai North Branch. 9566132545
6. **Er. T.SAMINATHAN,** EE/O&M/Thirukoilur, For GCM/Villupuram, Kallakurichi Branch. 9443481688
7. **Er. R.D.RAVI,** EE / O&M / Mettur, Former Branch President / Salem, Mettur Branch. 9655127770
8. **Er. V.NANNIYURAN,** AEE/O&M/Town/Sattur, For. Br.President/Virudhunagar Branch. 8838469894
9. **Er. C.DHARMAR,** AEE/S/230 KV SS/Kinnimangalam, For. Br. President/Theni Branch. 8122421499
10. **Er. S.VENKATESAN,** AEE/230KV SS/Ulundurpet, For. DS/Trichy, Kallakurichi Branch. 9942294671
11. **Er. M.GHOUSE MOHAMMED SHARIF,** EE / O&M / Orathanadu, Thanjavur Branch. 94435 47086.
12. **Er. V.RAGHUNATHAN,** AEE / SSE II Thanjavur / GCC Trichy, Trichy Branch. 9941395564
13. **Er. C.SHANMUGAM,** AEE / O&M / Town North / Cuddalore, Cuddalore Branch. 9080450755
14. **Er. K.DHARMARAJ,** AEE / Shift / 230KV SS / Kovilur, Sivagangai Branch. 9751095021
15. **Er. S.MABOOP HUSSAIN,** AEE / O&M / Mambakkam, Vellore Branch. 8220354116
16. **Er. S.VENKATESAN,** AEE / E / EM II / NCTPS III, NCTPS Branch. 7904449486
17. **Er. M.TAMILARASI,** AEE / SSE I / GCC Salem, Salem Branch. 88070 64004
18. **Er. V.SARAVANAN,** AEE / Shift / 230 KV SS / Singapuram, Salem Branch. 6381068393
19. **Er. S.DHANASEKAR,** AEE / O&M / Melmaruvathur, Chengalpattu Branch. 9943961084
20. **Er. K.SENTHILKUMAR,** AEE/Mtce./230KV SS / Kumbakonam, Thanjavur Branch. 7904470066.
21. **Er. D.SARAVANAN,** AEE/Shift/230KV GIS SS/Mylapore, Chennai Central Branch. 63836 07019
22. **Er. P.RAJENDRAN,** AEE/M/110 KV GIS SS / Govt.Estate, Chennai Central Branch. 9360619370
23. **Er. C.RAVICHANDRAN,** AEE (NI) / M / TS / TTPS, TTPS Branch. 9443657276
24. **Er. R.SARAVANAN,** JE I / Spl. Mtce. / Thiruvarur, Thiruvarur Branch. 9486832232
25. **Er. T.PANNER SELVAM,** JE I / Mtce. / 110 KV SS / TNSCB, Chennai South Branch. 9840625502
26. **Er. P.VENKATASUBRAMANIAN,** JE I / Shift / 400 KV SS / Ottiyambakkam, Chennai South Branch. 9444268442
27. **Er. M.RAJENDRAN,** JE I / 110/22 KV SS / K.G Patti, Tirunelveli Generation Circle, Tirunelveli Branch. 8778553475
28. **Er. B.SUDHA KUMARI,** JE I / O&M / Palliyadi, Kanyakumari Branch. 75581 15645
29. **Er. T.RAVICHANDRAN,** JE I / Papanasam PH, Tirunelveli Generation Circle, Tirunelveli Branch. 9442208291

***VOLUNTARY RETIREMENT***

30. **Er. K.PUSHPAVENI,** AE/MM/SE Operation/Coimbatore, Coimbatore Branch. 97888 50088 (As on 16.06.2025)

# Wind power generation picks up early in TN

- TIMES NEWS NETWORK

Chennai: Wind power generation has picked up in the state earlier this year, even as the actual wind season begins in June. On Saturday, Tamil Nadu Power Distribution Corporation evacuated 77.33 million units (Mu) of wind power, the highest so far this year. Wind energy generators attribute this to the early onset of the southwest monsoon in Kerala.

Since the summer was not as harsh as expected, wind generation started picking up from the second week of May. The per-day wind power generation, which was below 30 million units until May 10, crossed the 40 Mu mark the next day. So far, wind power generation has crossed the 70 Mu mark thrice and has consistently been above 40 Mu.

The all-time high wind power generation was 120.25 Mu, recorded on July 9, 2022. For the last two years, wind power generation was not great, but wind energy producers are optimistic about this year. "We expect 15-20% additional wind power generation over the average numbers this year. The wind season has started early, and we feel this year is going to be one of the best wind years," said K Venkatachalam, President of Renewable Energy Producers Association (REPA).

TNPDCL has also instructed subordinate officers to absorb as much wind power as possible in to the grid.

# கண்ணீர் அஞ்சலி

## பொறியாளர்கள்

1. 05.07.2025 அன்று **பொர்.மாணிக்கவாசகம்**, இளமின் பொறியாளர் – 2ம் நிலை/110/22 KV/ தேவகோட்டை துணை மின் நிலையம், சிவகங்கை கிளை அவர்கள்.
2. 09.07.2025 அன்று **பொர்.A.கணேசன்**, இளமின் பொறியாளர்/விநியோகம்/ஆலங்குளம் கிராமியம், திருநெல்வேலி கிளை அவர்கள்.

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். பொறியாளர்களின் மறைவிற்கு பொறியாளர் சங்கம் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## பொறியாளர் குடும்பத்தினர்கள்

1. 04.07.2025 அன்று **பொர்.A.அசோக்குமார்**, உதவி பொறியாளர்/தளவாட மேலாண்மை/சிவகங்கை, கிளைச் செயலாளர்/சிவகங்கை கிளை அவர்களின் **தாயார்.** 9566678588
2. 06.07.2025 அன்று **பொர்.G.கிருஷ்ணகுமார்**, உதவி செயற்பொறியாளர்/M/R&M/TTPS, TTPS கிளை அவர்களின் **தாயார்.** 9865212831.
3. 16.07.2025 அன்று **பொர்.N.பொன்கருப்பசாமி**, செயற்பொறியாளர்/TTPS/தூத்துக்குடி, அவர்களின் **மனைவி.** 8903457033.
4. 23.07.2025 அன்று **பொர்.R.உமா**, இளமின் பொறியாளர் – 2ம் நிலை/110KV/Cooks Road SS சென்னை மையக் கிளை அவர்களின் **தந்தையார்.** 9176878031
5. 24.07.2025 அன்று **பொர்.C.இராமசுப்பிரமணியன்**, உதவிமின் பொறியாளர்/பராமரிப்பு/230/110KV/ நல்லமநாயக்கன்பட்டி உபமின் நிலையம், விருதுநகர் கிளை அவர்களின் **தாயார்.** 9865230382

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினர்களை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 57 வது மாநிலப் பொதுக்குழு கூட்டத்தின் நிகழ்வுகள்












பொறியாளர் சங்கம் திருவாரூர் கிளையின் வாரியத்துடனான திட்டமிட்ட பேச்சுவார்த்தை 22.7.25 அன்று நடைபெற்றது. சங்கம் சார்பில்:

1. Er. P. சரவணகுமார் கிளை தலைவர்
2. Dr. S. சம்பத் கிளை செயலாளர்
3. Er.P. தர்பாரண்யம் கிளை பொருளாளர்
4. Er. K. கண்ணன் பொதுக்குழு உறுப்பினர்
5. Er. M. பாஸ்கர் கோட்ட செயலாளர்

வாரிய தரப்பு:

1. மேற்பார்வை பொறியாளர்
2. செயற் பொறியாளர் பொது.
3. உதவி செயற் பொறியாளர் (MM)
4. நிர்வாக அலுவலர்

MIN ALAI - July 2025 RNI No. TNBIL / 2012 / 47622
Printed Book Periodical



தமிழக அரசின் செய்தி தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ள நமது வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது




16.07.2025 அன்று மதிப்பிற்குரிய திரு.M.கோவிந்தராவ், I.A.S., மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு மின்உற்பத்தி கழகம் லிமிடெட் அவர்களை, நமது சங்கத்தின் பொறுப்பாளர்கள் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam